இரட்சிப்பு

# வெற்றிக்கு இருபது 'முடியும்'கள்

1. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்று வேதம் சொல்லும் பொழுது என்னால் முடியாது என்று நான் ஏன் சொல்ல வேண்டும் (பிலிப்பியர் 4:13) ?
2. என் குறைவுகளை எல்லாம் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என்று நான் அறிந்திருக்கும் பொழுது நான் ஏன் குறைவுபட வேண்டும் (பிலிப்பியர் 4:19) ?
3. தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என்று வேதம் கூறும்பொழுது நான் ஏன் பயப்பட வேண்டும் (2 தீமோத்தேயு 1:7) ?
4. தேவன் எனக்கென்று பகிர்ந்து கொடுத்த விசுவாசம் இருக்கையில் என் அழைப்பை நிறைவேற்ற முடியமா ? என்று நான் ஏன் சந்தேகிக்க வேண்டும் (ரோமர் 12:13) ?
5. கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் என்றும், தேவனை நான் அறிந்திருக்கிறபடியால் திடங்கொண்டு அதற்கேற்றபடி செய்வேன் என்றும் வேதம் சொல்கிறபொழுது நான் ஏன் பெலவீனனாய், கோழையாய் இருக்க வேண்டும் (சங்கீதம் 27:1), தானியேல் 11:32) ?
6. உலகத்தில் இருக்கிறவனிலும் என்னில் இருக்கிறவர் பெரியவராயிருக்கம் பொழுது சாத்தான் என்னை மேற்கொள்ள நான் ஏன் அனுமதிக்க வேண்டும் (1 யோவான் 4:4) ?
7. தேவன் கிறிஸ்துவுக்குள் எங்களை எப்பொழுதும் வெற்றி சிறக்கப் பண்ணுகிறார் என்று வேதம் சொல்லும் பொழுது நான் ஏன் தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டும் (2 கொரிந்தியர் 2:14) ?

8. கிறிஸ்துவே தேவனால் எனக்கு ஞானமாய் இருக்கும் பொழுது, அந்த தேவன் தம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு ஞானத்தை சம்பூரணமாய் கொடுக்கிறவராக இருக்கும் பொழுது நான் ஏன் ஞானம் அற்றவனாக இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 1:20, யாக்கோவு 1:5) ?

9. தேவனுடைய கிருபை, இரக்கம், உண்மை இவற்றை என் மனதிலே வைத்து நம்பிக்கைக் கொண்டிருக்கக் கூடுமானால் நான் ஏன் மனச்சோர்வு அடையவேண்டும் (புலம்பல் 3:21–23) ?

10. என்னை விசாரிக்கிற கிறிஸ்துவின் மேல் என் கவலைகளை எல்லாம் வைத்துவிடக் கூடும் என்றால் நான் ஏன் கவலை கொள்ள வேண்டும் (1 பேதுரு 5:7). ?

11. கர்த்தருடைய ஆவியானவர் எங்கேயோ ? அங்கே விடுதலையும் உண்டு என்று அறிந்த நான் ஏன் அடிமைத்தனத்துக்குள்ளாக வேண்டும் (கலாத்தியர் 5:1) ?

12. நான் கிறிஸ்துவுக்குட்பட்டிருக்கிறபடியால் எனக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை என்று வேதம் கூறும் பொழுது, நான் ஏன் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டது போல உணர வேண்டும் (ரோமர் 8:1) ?

13. இயேசு, சதாகாலங்களிலும் என்னோடிருப்பேன் என்றம், என்னைக் கைவிடுவதுமில்லை, என்னை விட்டு விலகுவதுமில்லை என்றும் வாக்கு அருளியிருக்கும் போது நான் ஏன் தனிமையாக உணர வேண்டும் (மத்தேயு 28:20, எபிரேயர் 13:5) ?

14. கிறிஸ்து எனக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு என்னை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார் என்று வேதம் சொல்லும் போது, நான் ஏன் சபிக்கப்பட்டவனாகவோ, துரதிருஷ்டசாலியாகவோ என்னை எண்ணிக் கொள்ள வேண்டும் (கலாத்தியர் 3:13–14) ?

இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

15. நான் பவுலைப் போல எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொள்ள முடியுமானால், நான் ஏன் அதிருப்தி கொண்டவனாய் இருக்க வேண்டும் (பிலிப்பியர் 4:11) ?

16. நான் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவர் எனக்காகப் பாவமாக்கப்பட்டிருக்கும் போது நான் ஏன் என்னை ஒன்றுக்கும் உதவாதவனாகக் கருத வேண்டும் (2 கொரிந்தியர் 5:21) ?

17. தேவன் என்னுடைய பட்சத்திலிருந்தால் யாரும் எனக்கு விரோதமாயிருக்க முடியாது என்று அறிந்திருக்கும் போது நான் ஏன் எல்லாரும் என்னையே உபத்திரவப்படுத்துவதாக எண்ண வேண்டும் (ரோமர் 8:31) ?

18. தேவன் சமாதானத்திற்குத் தேவனாய் இருக்கும் பொழுது, என்னில் வாசஞ்செய்யும் தமது ஆவியானவர் மூலமாக எனக்கு அறிவை அருளிச் செய்யும் பொழுது நான் ஏன் கலங்கித் திகைக்க வேண்டும் (1 கொரிந்தியர் 14:33, 2:12) ?

19. இவையெல்லாவற்றிலேயும் நான் என்னில் அன்பு கூறுகிற கிறிஸ்துவினாலே முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவனாய் இருக்கும் பொழுது நான் ஏன் என்னைத் தோற்றுப் போனவனாக எண்ண வேண்டும் (ரோமர் 8:37) ?

20. இயேசு இந்த உலகத்தையும் அதன் உபத்திரவங்களையும் ஜெயித்தார் என்பதை அறிந்ததன் மூலம் நான் திடன் கொள்ளக் கூடுமானால் வாழ்க்கையின் நெருக்கடிகள் என்னைக் கவலைக்குள்ளாக்கும்படி நான் ஏன் அனுமதிக்க வேண்டும் (யோவான் 16:33) ?

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

நீல் T. ஆன்டர்சன் எழுதிய “அடிமைத்தனத்தை முறிப்பவர்” ,”இருளின் மீது வெற்றி” புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது